**செய்தி வெளியீடு எண்: 325** **நாள்: 12.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (12.5.2018) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்ற 43வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஒவ்வொரு ஆண்டும் ஏற்காட்டில் நடைபெறுகின்ற கோடை விழா நிகழ்ச்சி மக்களின் மனதில் ஒரு எழுச்சியும், மகிழ்ச்சியும்அளிக்கின்ற இந்த 43வது கோடை விழா மற்றும் மலர்காட்சி தொடக்க விழாவிலே, சிறப்பாக, அற்புதமாக, தனக்கே உரிய பாணியில் நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
**திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!**

இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே எந்தளவிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது, என்ன திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை விளக்கமாக, தெளிவாக எடுத்து உரைத்திருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
**திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!**

தமிழகத்திலே சுற்றுலாத் துறையின் மூலமாக தமிழகம் எவ்வளவு வளர்ச்சியை கண்டிருக்கின்றது, மக்களுக்கு எவ்வளவு மனமகிழ்ச்சியை இந்தத் துறை அளித்திருக்கின்றது என்பதை புள்ளிவிவரத்தோடு சுட்டிக்காட்டிய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்**திரு.வெல்லமண்டி.என்.நடராசன் அவர்களே!**

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய
அரசு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் அரசு முதன்மை செயலாளர் **திரு. அபூர்வ வர்மா அவர்களே!**

திட்ட விளக்கவுரை ஆற்றிய
வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மை செயலாளர், மிகத் தெளிவாக, சிறப்பாக வேளாண்மைத்

துறையிலே அத்தனையும் அத்துப்படியாக இருக்கின்ற **திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களே!**

இறுதியாக நன்றியுரை ஆற்றவுள்ள, இந்த கோடை விழா சிறப்பாக நடைபெற வேண்டும், நம்முடைய மாவட்ட மக்கள் மட்டுமன்றி, அண்டை மாவட்ட மக்களும் மகிழ்ச்சியுற கண்டு களித்து இன்புற வேண்டுமென்பதற்காக அருமையா கோடை விழாவினை ஏற்பாடு செய்த ஆற்றல்மிகு மாவட்ட ஆட்சித் தலைவர்
**திருமதி. ரோஹிணி பாஜிபாகரே அவர்களே!**

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய காமராஜ் அவர்களே!
இங்கே சிறப்பான உரையாற்றிய ஏற்காடு சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி.சித்ரா அவர்களே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்குரிய சுந்தரம் அவர்களே!
மரியாதைக்குரிய பன்னீர்செல்வம் அவர்களே!
முன்னாள் அமைச்சர், மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய செம்மலை அவர்களே!
மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மரியதைக்குரிய வெங்கடாசலம் அவர்களே! மரியாதைக்குரிய சக்திவேல் அவர்களே! மரியாதைக்குரிய மருதமுத்து அவர்களே! மரியாதைக்குரிய ராஜா அவர்களே! மரியாதைக்குரிய சின்னத்தம்பி அவர்களே! மரியாதைக்குரிய வெற்றிவேல் அவர்களே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர்
திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே!
சேலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவர்
திரு ஆர்.சின்னுசாமி அவர்களே!
உள்ளாட்சிஅமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!
கூட்டுறவு சங்க நிர்வாகிகளே! கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே!
அரசு உயர் அதிகாரிகளே!
வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே,

தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

இன்று ஏற்காட்டில் நடைபெறும் 43வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை துவக்கி வைப்பதில் நான் உண்மையிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு 1976 முதல் கோடை விழா சிறப்பாக ஏற்காடு மலையிலே கொண்டாடப்பட்டு வருகிறது.இந்த வருடம் 43 வது கோடை விழா மற்றும் மலர்க் கண்காட்சி விழா இன்று முதல் 16ஆம் தேதி வரை கிட்டத்தட்ட 5 நாட்களுக்கு சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது என்ற செய்தியை அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் மகிழ்ச்சியுடன்தெரிவித்துக் கொள்கிறேன். இதை சுற்றுலாப் பயணிகளும் மகிழ்ச்சியோடு கண்டு களிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,ஒரு நாட்டின் சொத்துக்களில் முதன்மையானது இயற்கை வளங்கள். அவற்றிற்கும் முதன்மையானது மலை வளம் என்பதை நாம் உணர வேண்டும். ஏற்காட்டு மலையால், நாம் பெறுகின்ற செல்வங்கள் ஏராளம். கண்ணிற்கு குளிர்ச்சியையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் தருகின்ற வண்ண, வண்ண மலர்கள்தான் இறைவன் படைப்புகளிலே அபூர்வமான, அதிசயமான படைப்புகளாக விளங்குகின்றன. காரணம், அழகும் வாசனையும் ஒருங்கே கொண்ட தெய்வீக படைப்பு மலர்கள் என்பதால் இறைவனுக்கு அவை சூட்டப்படுகின்றன.

இந்த ஆண்டு நடைபெறுகின்ற ஏற்காடு மலர்க்கண்காட்சியில் சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்து அளிக்கும் வகையில் வண்ண ரோஜா, கார்னேசன், ஜெர்பெரா, சாமந்தி போன்ற 2 லட்சத்து 50 ஆயிரம் மலர்களை கொண்டு காண்போரை வியக்க வைக்கும் வகையிலும், தமிழ்நாட்டின் பெருமைகளை பறைசாற்றும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள தலைமைச் செயலகம், வேளாண் பெருமக்களுக்கு கூட்டுப் பண்ணை திட்டத்தினை அறிமுகப்படுத்துகின்ற விதத்திலே மலர்களால் உருவாக்கப்பட்டுள்ள டிராக்டர், 25.3.2018 அன்று துவக்கி வைக்கப்பட்ட சேலம் விமான போக்குவரத்து சேவையை நாட்டு மக்களுக்கு தெரிவிக்கின்ற விதத்திலே மலர்களால் உருவாக்கப்பட்டுள்ள விமான மாதிரி,

இளைய சமுதாயத்தினரை கவரும் வகையில்வடிவமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர், அழகிய பெண் உருவம் கொண்ட மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உருவம்,மேலும் குழந்தைகளை கவரும் வகையில்15 ஆயிரம் வண்ண ரோஜா மலர்களால் உருவாக்கப்பட்ட மோட்டு, பத்லா மற்றும் சிங்சாங் போன்ற கார்ட்டூன் உருவங்கள் காண்போர் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் வண்ணமாக அமைந்துள்ளன.50க்கும் மேற்பட்ட மலர் வகைகளை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பூந்தொட்டிகளில் பல வண்ணங்களில்உருவாக்கப்பட்டுள்ளது சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு விருந்தாகும்.

ஏற்காடு மலைப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்கச் செய்யும் வகையில் தோட்டக்கலைத்துறை சார்பில் சுமார் 36 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அரசு தாவரவியல் பூங்கா மற்றும் மரபியல் பூங்கா ஆகியவை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 15.10.2012 அன்று காணொலி காட்சியின் மூலம் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் ஏற்காட்டிற்கு சுற்றுலா பயணிகள் அதிகமாக வரத்தொடங்கினார்கள்.

இந்த இனிய வேளையில் ஏற்காட்டின், பழமையையும் பெருமையையும் நாம் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் சேர்வராயன் மலையில் அமைந்துள்ள இந்த ஏற்காடு மலையானது, சுமார் ஆயிரத்து 515 மீட்டர் உயர்ந்து கம்பீரமான, பசுமையான தோற்றத்துடன் பார்ப்பவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கும் ஒரு அழகு மலையாகத் திகழ்கிறது.

ஏரியும் காடும் கலந்த ஒரு மலை என்பதால் இது ஏற்காடுமலை என அழைக்கப்படுவதாக கூறுவார்கள்.19 ஆம் நூற்றாண்டில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஒரு ஆங்கிலேயரால் ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட காபி செடிகள் இங்குள்ள கிரான்ச் எஸ்டேட்டில் முதன்முதலில் நடவு செய்யப்பட்டு, அதன்பிறகு இந்த மலைப்பிரதேசத்தில் உள்ள மற்ற எஸ்டேட்களிலும் பயிரிடப்பட்டு, இது ஒரு**'காபி மலை'**என்று பெயர்பெறும் அளவிற்கு வளர்ந்தது. அதன் பிறகு பலா, ஆரஞ்சு, கொய்யா போன்ற பழ வகைகளையும் இங்கு பயிரிட தொடங்கினார்கள். ஏற்காடு மலையானது மரம், செடி, பூக்கள், விலங்குகள், அருவிகள், பள்ளத்தாக்குகள், பறவைகள் போன்ற இயற்கை வளங்கள் நிறைந்தஒரு பாதுகாப்பான **"வண்ணமிகு மலைப் பகுதி"**யாக இன்றைக்கு இயற்கை சூழலால் திகழ்ந்து காட்சியளிக்கின்ற ஒரு மலைப்பிரதேசம்.

இங்குள்ள பள்ளிக்கூடங்கள் **“ஏற்காடு ஒரு கல்வி பூங்கா”** என்பதை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலேயர்கள் கதிரவன் மறையும் குளிர்ச்சியான நேரத்தில் ஏற்காடு மலையின் காட்சியை அமர்ந்து ரசித்த இருக்கைகளை, இன்று பெண் இருக்கைகள்(Lady’s Seat), ஆண் இருக்கைகள்(Gent’s Seat), குழந்தை இருக்கைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இங்கு அமைந்துள்ள தொலைநோக்கியுடன் கூடிய காட்சி கோபுரம் ஒட்டுமொத்த ஏற்காடு மலையின் அழகையும் கண்டு ரசிக்க பெரிதும் உதவுகிறது.

ஏற்காடு அரசு தோட்டக்கலைப் பண்ணை மற்றும் அண்ணா பூங்கா மூலம் வருடம் 7 லட்சத்து 50 ஆயிரம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்காடு பகுதி விவசாயிகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 83 லட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைக்கிறது.

இந்த மலர்க்கண்காட்சியைத் தவிரமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த, நாய் கண்காட்சி, ஆரோக்கிய குழந்தைகள் போட்டி, பாரம்பரிய உணவு போட்டி, கோலப் போட்டி, படகு போட்டிகள் ஆகியவை நடைபெற உள்ளன. கலை பண்பாட்டுத்துறை சார்பில் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.இவை அனைத்தையும் சுற்றுலா பயணிகள் கண்டு களித்து கோடை விடுமுறையை இன்பமாக கழிப்பதற்காக இந்த நேரத்திலே உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி இந்தக் கோடை விழா நிகழ்ச்சி.

இங்கே ஒரு முக்கியமான தகவலை உங்களிடம் நான் கூறியாக வேண்டும். பூச்சிகள் தாவரங்களை தின்னும் என்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இங்குள்ள தாவரவியல் பூங்காவில் பூச்சியை தின்னும் அதிசய பிட்சர் தாவரங்கள் இருக்கின்றன.

12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூக்கள் இங்கு பூப்பது ஏற்காடுக்கு மேலும் பெருமையை சேர்க்கிறது.

இங்கு அதிக குளிரும் இல்லாமல், அதிக வெப்பமும் இல்லாத இதமான தட்ப வெட்பம், சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கிறது. இங்கு நிலவும் இதமான தட்பவெட்ப சூழ்நிலையை அனுபவிக்க, ஆண்டுதோறும் சுமார் 5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் ஏற்காடு மலைக்கு வருகை புரிந்த வண்ணம் உள்ளனர். இந்த வருடம், கடந்த வருடத்தைவிட அதிக பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்காட்டை 'ஏழைகளின் ஊட்டி' என்று கூற காரணம், கையில் கொஞ்ச பணமும் நடந்து செல்ல போதுமான வலிமையும் இருந்தால் போதும், இந்த ஏற்காடு நம் இதயத்தோடு இணைந்து நம்மை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திவிடும்.

இன்றைய அவசர உலகத்தில் மனிதன் இயற்கையை நேசிக்க, இம்மாதிரியான மலர்க்கண்காட்சிகளை தமிழ்நாடு அரசு கோடைக்காலத்தில் மலைப்பிரதேசங்களில் ஏற்பாடு செய்து வருகின்றது.இந்த மலர்க் கண்காட்சியானது ரசிக்க மட்டுமல்ல, அந்த மலர்கள் சொல்லும் அரிய செய்தியை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மரங்களை வெட்டக்கூடாது, செடிகளை அழிக்கக்கூடாது என்பதுதான் அந்தச் செய்தி.இந்த மலர்க் கண்காட்சியின் மூலம் நான் சொல்லும் செய்தியும் அதுதான்.

இந்த ஆண்டு கோடை விழா பசுமை விழாவாக கொண்டாடப்படுகிறது என்றும், தமிழ்நாட்டை முன்னணி பசுமை மாநிலமாக மாற்றம் செய்ய இவ்விழாவுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு இலவசமாக 1 லட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றில் இடம் பெற்ற எத்தனையோ மன்னர்களின் பெயர்களை நாம் படித்திருக்கின்றோம்.அத்தனை மன்னர்களின் பெயர்களும் நம் நினைவில் நிற்பதில்லை. ஆனால், சக்கரவர்த்தி அசோகன் போன்ற ஒரு சிலர் மட்டும்தான் நம் நினைவுகளில் இப்போதும் நிற்கிறார்கள். ஏனென்றால், அவர் தொலைநோக்கு சிந்தனையுடன் சாலை ஓரங்களின் இருபுறமும் குளிர்ச்சிதரும், நிழல்தரும் மரங்களை நட்டு வளர்த்தார். அதனால், அவருக்கு காலத்தால் அழியாத நிரந்தர புகழ் கிடைத்தது. எனவே, நாம் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு மரமாவது வைத்து அதை வளர்க்க வேண்டும் என்று இந்த இனிய வேளையில் உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் தனியார் தோட்டத்தில் உள்ள மரம் காற்றில் சாய்ந்து விட்டால்கூட, அந்த மரத்திற்கு பதிலாக இன்னொரு மரக்கன்றை உடனடியாக நடவேண்டும். அதனால்தான் அந்த நாடுகள் பசுமை நிறைந்த சொர்க்கபுரியாக திகழ்கின்றன.அந்த நாடுகள் மலர்கள் நிறைந்த வண்ண தேசமாக உலக சுற்றுலா பயணிகளை அதிகமாக கவர்ந்திழுக்கின்றன. நம் நாட்டு மக்களும் அதைவிட இயற்கை பிரியர்கள்தான், இயற்கையை நேசிக்கக்கூடியவர்கள் தான்.தாமாகவே முன்வந்து இயற்கையை பாதுகாத்து வருகிறார்கள். **‘வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்**’என்பதை மாற்றி **‘ஆளுக்கு ஒரு மரம் வளர்ப்போம்**’ என்ற மனநிலைக்கு வந்துவிட்டார்கள்.

மரம் நடுவதை மேலும் ஊக்கப்படுத்தத்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த தினத்தன்று ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மரங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு நட்டு வருகிறது. இந்த வருடம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70வது பிறந்த தினத்தன்று 70 லட்சம் மரக்கன்றுகள் நடும் இலக்கோடு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் முதல் மரக்கன்றை நட்டு, அத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அரசு திட்டங்களில் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மரக்கன்று நடுவதை ஒரு கடமையாகவும், நிகழ்ச்சியாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்தி வந்தார்கள்.

அதேபோன்று, அரசு நிகழ்ச்சிகள் அனைத்திலும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் ஒரு மகத்தான, மக்களுக்கான விழாவாக மாற்றி அமைத்தது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு செய்திருக்கின்றஓரிரு சாதனைகளை மட்டும் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

- சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், **“கூட்டுப் பண்ணையத் திட்டம்”** என்ற முன்னோடித் திட்டம் மூலம் **100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில்2000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது. இக்குழுக்களுக்கு** அறுவடை இயந்திரங்கள், 747 டிராக்டர்கள், **1,849** பவர் டில்லர்கள், **1,369** களையெடுக்கும்

இயந்திரங்கள், 783 சுழற்கலப்பைகள், 666 புதர் வெட்டும் கருவிகள் மற்றும் 3,412 இதர பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டு, **1,98,800 சிறு, குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்** என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் மூலமாக வேளாண் உற்பத்தி பெருகும். அதற்காகத்தான் இந்தியாவிலே உணவு தானிய உற்பத்தியில் தொடர்ந்து முதலாவதாக இருந்து தமிழ்நாடு கிரிஷ் கர்மாண் விருதை பெற்று வருகின்றது.

- மானாவாரி விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்த 803 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 25 லட்சம் ஏக்கர் பரப்பில் நான்காண்டுகளில் மானாவாரி நிலங்களை தொகுப்பாக மேம்படுத்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நடப்பாண்டில் 10 லட்சம் ஏக்கர் பரப்பில் விரிவுபடுத்தப்படும்.

- எளிதில் அழுகும் காய்கறிகள் மற்றும் பழங்களில், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தவிர்த்து விவசாயிகள் நல்ல விலை பெறவும், மதிப்புக் கூட்டும் பொருட்களை உருவாக்கவும் தரமான பழங்கள், காய்கறிகள் மக்களுக்கு தடையின்றி கிடைக்கவும், 398 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பில் விநியோகத் தொடர் மேலாண்மைத்திட்டம் 10 மாவட்டங்களில்செயல்படுத்தப்படுகிறது.

- வேளாண் கல்வியிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தேசிய அளவில் உள்ள 82 பல்கலைக்கழகங்களில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் முதல் நிலை வகிக்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைகூறுபவர்கள் எப்போதும் குறைகூறி கொண்டுதான் இருப்பார்கள். மக்கள் நலப்பணிகள் செய்வதைகூடஇவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் குறை சொல்கிறார்கள். அதை ஒரு காலமும் மக்கள் நம்பமாட்டார்கள். இதை ஒரு கதையின் மூலம் கூறினால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி தினமும் ஆற்றிலிருந்து தன் தோட்டத்திற்கு குடத்தில் தண்ணீர் எடுத்து வந்து செடிகளுக்கு ஊற்றுவதை வழக்கமாக கொண்டிருந்தார். அவர் சுமந்து வரும் குடத்திலிருந்து தண்ணீர் ததும்பி வழி நெடுக சிந்திக் கொண்டிருந்தது.அந்த தோட்டத்தின் ஓரத்தில் ஒடுக்கு விழுந்து, எதற்கும் பயன்படாமல் இருந்த ஒரு அலுமினிய குடம் அன்றாடம்

இதைப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த தண்ணீர் குடத்தைப் பார்த்து 'தண்ணீரைக் கூட சிந்தாமல் சிதறாமல் எடுத்துச் செல்ல தெரியவில்லையே, நீ எல்லாம் ஒரு குடமா?' என்று கிண்டலும் கேலியும் செய்தது. ஒருநாள் தண்ணீர் குடம் தன் எஜமானனாகிய விவசாயிடம், இது பற்றி கூறி வருத்தப்பட்டது. அதற்கு அந்த விவசாயி"குடமே! உன் அருமை அந்த ஓட்டைவாய் குடத்திற்கு தெரியவில்லை. இயலாமையால் மற்றவர்களை குறைகூறுவதையே பிழைப்பாக்கிக் கொண்டிருக்கிறது. அதனால்தான்அந்த குடம் ஒரம் கட்டப்பட்டு விட்டது.நான் உன்னை சுமந்து வரும் பாதையில் இருக்கும் பூஞ்செடிகளை கவனித்தாயா? அவையெல்லாம் இந்த அளவிற்கு அழகாக வண்ண வண்ணமாக பூத்திருக்க நீதான் காரணம் என்றுஅந்தக் குடத்திற்கு தெரியுமா?'"உன்னிடமிருந்து சிந்தும் தண்ணீர் ஒரு துளியும் வீணாவதில்லை. உன் பக்கமாக இருக்கும் இடத்தில் பூஞ்செடி விதைகளை விதைத்து விட்டேன். நீ தினமும் சிந்தும் தண்ணீரில்தான் அவை இன்றுஅழகாக பெரிதாக வளர்ந்து, அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்துதான் நான் வீட்டை அலங்கரிக்கின்றேன். மீதமுள்ள பூக்களை விற்று பணமும் சம்பாதிக்கின்றேன்'' என்று அந்த ஓட்டை குடத்தின் காதில் விழும்படி கூறினார். 'தண்ணீரை அந்தக்குடம் வீணாக செலவழிக்கிறது என்று தவறாக நினைத்து விட்டேன். வழியில் உள்ள தாவரங்கள் வளர்வதில் அந்தக் குடம், என்னை முந்திக் கொண்டதை உணர்ந்து கொண்டேன்'', என்று கர்வம் பிடித்த குடம்தன் தலைகனத்தை இறக்கி வைத்தது. அன்றிலிருந்து குறை சொல்வதைஅந்த அலுமினியக் குடம் நிறுத்திக்கொண்டது.

அதைப்போலத்தான் பலர் இன்றைக்கு புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்.

நெடுங்சாலைத் துறையின் மூலமாக சில சாதனைகளை நாம் படைத்திருக்கின்றோம்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் **2514.67** கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. **2011** முதல் **2016** வரை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் **1481.863** கிலோ மீட்டர் சாலைகள் ரூபாய் **729.3** கோடி மதிப்பீட்டிலும், **46** பாலங்கள் ரூபாய் **323.54** கோடி மதிப்பீட்டிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. **2016–17**ஆம் ஆண்டில் **401.364** கிலோ மீட்டர்

சாலைகள் ரூபாய் 223.39 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 4 பாலங்கள் ரூபாய் 9.25 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதும் சரி, அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகும் சரி, சேலம் மாவட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையில் இருக்கின்ற பெரும்பாலான சாலைகளும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாளையதினம் நடைபெறவிருக்கின்ற நிகழ்ச்சியிலே, தாரமங்கலம் நகராட்சியில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்க அடிக்கல் நாட்டப்படவிருக்கிறது. அதேபோல சேலம் மாநகரத்தில் முள்ளுவாடிகேட் மற்றும் அணைமேடு பகுதியில் இரயில்வேமேம்பாலம் அமைக்க அடிக்கல் நாட்டுவிழா நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதேபோல, ஏற்காடு மலைப்பகுதியில், பக்கவாட்டுச் சுவர், தடுப்புச் சுவர், பாதுகாப்புச் சுவர், கான்கிரீட் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிகளுக்கு வெள்ள நிவாரண நிரந்தர சீரமைப்பு மூலம் ரூபாய் 42.96 கோடிக்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது, பணி விரைவில் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேளாண்மைத் துறை என்பது ஒரு முதன்மையான துறையாகும். தமிழ்நாட்டில் ஏறக்குறைய விவசாயிகள், விவசாயத்தைச் சார்ந்த பணிகள், விவசாய தொழிலாளர்கள் என ஏறக்குறைய 65 சதவிகிதம் வேளாண்மையை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்குத் தேவையான திட்டங்களை தீட்டி, அவர்களுக்கு தேவையான நன்மைகளை செய்வதுதான் அரசின் முதன்மையான கடமையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், நீரைப் பாதுகாக்க வேண்டும், வேளாண் தொழிலை பாதுகாக்க வேண்டும். நீர் இருந்தால்தான் வேளாண் துறை சிறக்கும். விவசாயிகள் வறட்சி வருகின்றபொழுதும், வெள்ளம் வருகின்றபொழுதும் பாதிக்கப்படுகின்றார்கள். விவசாயி பாதிப்புக்குள்ளாமல் விளைச்சல் பெறவேண்டுமென்று சொன்னால், அது சாதாரண விஷயமல்ல, அது அரிது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு, வறட்சி வருகின்றபொழுது, நிவாரணம் வழங்கக்கூடிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. அம்மா இருக்கின்ற காலத்திலும் சரி, அம்மா

மறைவிற்குப் பிறகும் சரி, அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றோம். அதேபோல், வெள்ளத்தால் பாதிக்கின்ற விவசாயிகளுக்கும், பயிர் இழப்பீட்டுக்கும் உதவி செய்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு தான். வேளாண் பெருமக்கள் எப்பொழுதெல்லாம் பாதிக்கப்படுகின்றார்களே, அப்பொழுதெல்லாம் உதவி செய்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். முதன்மைத் துறை வேளாண்மைத் துறை. வேளாாண்மைத் துறை சிறந்தால்தான் உணவு உற்பத்தி அதிகமாகக் கிடைக்கும். உணவு உற்பத்தி சேமிப்பு செயல்படுத்தப்பட்டால்தான் மக்களுக்குத் தேவையான உணவு, தானிய பொருட்கள் தடையில்லாமல் கிடைக்கும். இந்திய அளவிலேயே உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. அந்தளவிற்கு, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான உதவிகளை செய்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இரவென்றும், பகலென்றும் பாராமல் உழைக்கின்ற வேளாண் பெருமக்களுக்கு தேவையான அத்தனை உதவிகளையும் செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டதைப்போல், மனதுக்கு அமைதி, நிம்மதி கிடைக்கவேண்டும். ஒரு மனிதன் எவ்வளவு பாடுபட்டாலும் நிம்மதி இல்லையென்றால் அவன் வாழ்க்கையை முழுமையாக வாழ முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிம்மதி இயற்கையை பார்த்தால்தான் கிடைக்கும். அந்த இயற்கை மலையில்தான் இருக்கின்றது. இயற்கைக்கு மயங்காத மனிதர்களே கிடையாது, அதை இரசிக்கின்றபொழுதுதான் மனம் அமைதி அடைகின்றது. அப்படிப்பட்ட அமைதியை கொடுப்பதற்குத்தான் இந்த கோடை விழா என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கோடை விழாவில் 2 இலட்சத்து 20 ஆயிரம் மலர்கள் பார்க்கின்றோம். ஒரேயிடத்தில், நம்முடைய தோட்டக்கலைத் துறை, சுற்றுலாத் துறை, வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மாவட்ட நிர்வாகமும் ஒன்றாக இணைந்து இந்த கோடை விழாவை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். வண்ண, வண்ண மலர்களை நாம் கண்டுகளிக்கக்கூடிய, மனதிற்கு இனிமையான, மகிழ்ச்சியான அந்தக் காட்சியைப் பார்க்கின்றோம். ஆக, மனம்

நிறைவு பெறுகின்றது, மனம் அமைதி பெறுகின்றது, மனம் நிம்மதி பெறுகின்றது. அத்தனையும் கிடைப்பதற்குத்தான் இந்த கோடை விழா. அதுவும், ஏழை, எளிய மக்கள் நிறைந்த மாவட்டம் நம்முடைய மாவட்டம், அண்டை மாவட்டங்களான கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் இருக்கின்ற அத்தனை மக்களும் இந்தக் கோடை விழாவை பார்த்து, கண்டு, களித்து, மனநிறைவு பெறுகின்ற ஒரு அற்புதமான நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கோடை விழா நம் மனதிற்கு மகிழ்ச்சியான சம்பவத்தை கொடுப்பது மட்டுமல்ல, இதில் என்னென்ற அரிய வகை செடிகள் இருக்கின்றன, என்ன மருத்துவ குணங்கள் இருக்கின்றது என்பதையும் நாம் பார்க்கின்றோம், எவ்வளவு காய்கறிகள் இருக்கின்றன என்பதையும், அதனை எப்படிப் பயிரிட்டு நமக்குக் கொடுக்கின்றார்கள் என்பதையும் நாம் பார்க்கின்றோம். அப்படிப் பார்க்கின்றபொழுது, கொய்யா, மா, வாழை போன்ற பல்வேறு கனிகள் மிகச் சிறப்பாக நம்முடைய விவசாயிகள் பயிரிட்டு, அதை கண்காட்சியாக வைத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த கோடை விழா கண்காட்சி மகிழ்வதற்கு மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கைக்கு அடித்தளமாகவும் அமைகின்றது. அதுமட்டுமல்ல, நம்முடைய வேளாண் பெருமக்கள் அதிக மகசூல் பெறவேண்டுமென்பதற்காக நம்முடைய தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை இரண்டும் இணைந்து, பல்வேறு உத்திகளை நமக்கு கண்காட்சியாக வைத்திருக்கின்றார்கள். அதைப் பார்த்து, விஞ்ஞானப்பூர்வமாக விவசாயப் பணிகளை மேற்கொண்டால் அந்த விவசாயிகள் பயிரிடுகின்றபொழுது அதிக லாபத்தை, அதிக விளைச்சலை பெறமுடியும். அதுமட்டுமல்ல, எல்லாத் துறையிலும் நாம் கண்டுள்ள வளர்ச்சியை, அரசு மக்களுக்கு வழங்குகின்ற திட்டங்களை, அரசின் செயல்பாட்டினை இந்த அரங்குகள் மூலமாக தெரிந்துகொள்ள முடியும்.

ஏற்காடு மலைவாழ் மக்கள், ஏழை மக்கள், அன்றாடம் உழைத்தால்தான் உணவு கிடைக்கும் என்ற நிலையில் வாழ்கின்ற மக்கள். அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்துதர வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இங்கே பட்டா வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். சட்டப்படி, யாருக்கெல்லாம் வழங்க முடியுமோ அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு முன்வரும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

மலைவாழ் ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலித்து ஏற்காடு மலையிலும் பள்ளி அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்களின் குழந்தைகள் அங்கேயே தங்கி, அனைத்து வசதிகளுடன் கூடிய பள்ளி கட்டிக் கொடுக்கப்படும். அந்த மாணவர்களுக்கு உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தரப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, கருமந்துறையிலும் அடுத்த ஆண்டு முதல் பள்ளி ஒன்று அமைத்துக் கொடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் கோரிக்கையை ஏற்று, கருமந்துறையில் இரண்டு மினி பஸ்களும், ஏற்காடு மலையில் இரண்டு மினி பஸ்களும் இயக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய தமிழகத்தில் 20 மாவட்டங்கள் மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியாக கண்டறியப்பட்டிருக்கின்றன. அவர்களின்அடிப்படை தேவைகளான, சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி போன்ற பல்வேறு வகையான வசதிகளை நிறைவேற்றித் தருவதற்காக அம்மாவினுடைய அரசு தனி கவனம் செலுத்தி, பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசிடமிருந்து சில நிதியுதவி கிடைக்கின்றது. அந்த நிதியுதவி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மலைவாழ் மக்களின் நலன் கருதி நான் குறிப்பிட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தனியே எந்த முடிவும் எடுக்காமல், ஒரு திட்டத்தை எப்படி செயல்படுத்தினால் சிறக்கும் என்று மூத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்துபேசி, முடிவெடுத்துதான் அந்தத் திட்டத்தை நான் அறிவிக்கின்றேன். பலரோடு பேசுகின்றபொழுதுதான் அந்தத் திட்டம் சிறக்கும். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு பிரச்சினை இருக்கும். அவற்றை உள்வாங்கி, ஒருமித்த கருத்தோடு, திட்டத்தை வகுத்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். அப்படித்தான் அம்மாவினுடைய அரசு இன்றைக்கு

வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த கோடை விழா நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், நம்முடைய கலைஞர்கள் நமது காதுக்கினிய அற்புதமான படைப்புகளை படைத்தார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, வண்ண, வண்ண மலர்களை உருவாக்கி, நமது கண்ணுக்கு குளிர்ச்சியாகவும், மனதிற்கு மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற அற்புதமான மலர்களை நம் மனம் குளிர அருமையாக அமைத்துக் கொடுத்த, தோட்டக்கலைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், அதற்குத் துணையாக இருந்த வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், சுற்றுலாத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், அதற்கு முன்னெற்காடு செய்த மாண்புமிகு வனத்துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் அவர்களோடு இணைந்து சிறப்பாக இந்த கோடை விழா அமைய வேண்டுமென்பதற்காக பாடுபட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**